# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே

## தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023

## திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 9

பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

1. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (குறள் 102)

ஒருவர் தக்க காலத்தில் செய்த நன்மையானது சிறியதாக இருந்தாலும் அது இவ்வுலகத்தை விட மிகப் பெரியதாகக் கருதப்படும்.

2. இல்லாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (குறள் 41)

இல்வாழ்வோரின் கடமை பரந்தது. இவர்கள் துறந்தோர், ஏழைகள், இறந்தோர் ஆகியோருக்கும் துணை.

3. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள் 131)

ஒழுக்கம் ஒருவரை மாந்த நேய விழுமியங்களுடன் வாழ வழிவகுக்கிறது. எனவே, மாந்தராகப் பிறந்த ஒவ்வொருவரும் அறநெறிக்கருத்துக்கள், ஒழுக்கங்கள் போன்றவற்றைச் சிந்தித்து அவற்றைக் கடைப்பிடித்து வாழ்தல் என்பது மிகவும் அகத்தியமாகிறது.

4. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் 391)

கற்க வேண்டிய நூல்களை நாம் பிழை இல்லாது கற்க வேண்டும். அவ்வாறு கற்றதன்படி ஒழுக வேண்டும்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள் 45)

குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பது அரிது. (குறள் 16)

வானிலிருந்து மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் பசுமையான புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது.

7. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி. (குறள் 542)

உலகத்து உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. அதுபோல, மக்கள் அரசனது நல்லாட்சியை நோக்கி வாழ்கின்றனர்.

8. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் 100)

இனிய சொற்கள் இருக்கும்போது கடுமையான சொற்களைக் கூறுவது ஒரு மரத்தில் பழங்கள் இருக்கும் போது அதனை விட்டுவிட்டுக் காய்களைப் பறித்து உண்பதைப் போன்றதாகும்.

9. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (குறள் 645)

நாம் சொல்ல விரும்பிய சொல்லை வெல்வதற்கு வேறு சொல் இல்லை என்பதை அறிந்த பின்னரே அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் 80)

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர்நிறைந்த இந்த உடம்பு. அன்பு இல்லையென்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.